# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2020
கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் 2020
**Bachelor of Arts (External - New Syllabus) 100 Level - 2020**

### வீட்டிற்கு எடுத்துச் செல்லும் திறந்த புத்தகப் பரீட்சை

### ECNE 102: ஒப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

<u>அறிவுறுத்தல்கள்</u>
**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக
மொத்தப் புள்ளிகள் =100

---

1. (i) பெரிய பிரித்தானியாவில் நிலவிக் காணப்பட்ட மானிய முறையின் சமூக, பொருளாதார விளைவுகளைப் பரிசீலனை செய்க. (06 புள்ளிகள்)

   (ii) மேற்கு ஐரோப்பாவின் மானிய முறையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகளை நுணுக்கமாகப் பரிசீலணை செய்க. (06 புள்ளிகள்)

   (iii) பெரிய பிரித்தானியாவில் ஏற்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் நில அடைப்பு இயக்கங்களின் சமூக, பொருளாதார தாக்க விளைவுகளை தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

2. (i) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நிகழ்ந்த பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சியில் பருத்தி நெசவுக் கைத்தொழிலில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களின் வகிபாகம் குறித்து ஆராய்க. (15 புள்ளிகள்)

   (ii) "பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிலாக்கத்தின் எழுச்சியானது பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இடம் பெற்ற ஒரு சடுதியான நிகழ்வாக அன்றி அது, ஒரு நீண்டகால செய்முறையாகவே கொள்ளப்படக் கூடியதாகும்." கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

3. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் காணப்பட்டிருந்த இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பினை ஆராய்வதில் 'இரட்டைப் பொருளாதாரம்' என்ற பதத்தின் பொருத்தப்பாடு குறித்து ஆராய்க. (15 புள்ளிகள்)

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத் துறைக்கு உள்நாட்டு ஊழியத்தின் நிரம்பல் போதிய அளவில் நிகழாமல் போனமைக்கான பிரதான காரணங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

5. இலங்கையில் கோப்பிக் கைத்தொழிலின் துரித வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளை அடையாளம் செய்வதுடன், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைப் பொருளாதாரத்தில் அக்கைத்தொழில் இட்டு வந்த பிரதான மாற்றங்களையும் பரிசீலனை செய்க. (15 புள்ளிகள்)

*******************************************************